**<u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>**

**<u>CC No. 181/2017</u>**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-4 |
| Name | : உன்னிகிருஷ்ணன் |
| Father/Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11.12.2024.

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி–</u>**

எதிரியின் அண்ணன் சையத் இப்ராகிம் என்கிற அஸ்லாம் என்பவரை பார்ப்பதற்காக அவர் வசிக்கும் மும்பைக்கு தான் அடிக்கடி செல்வதாக கூறினார். பிறகு அவரின் அண்ணனின் நண்பர்கள் ஆசிம் அலி, சண்முகம் என்கிற ஜம்பு, வீரமணி ஆகியோருடன் சேர்ந்து ஓடும் வண்டியில் ஏலக்காய் மூட்டையை திருடுவதாக கூறினார். அதன்மூலம் அவர்களுக்கு நல்ல வருமானம் வருவதாகவும், அதேபோல் தானும் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3 ஆம் வாரம் விழுப்புரம் ரயில்வே நிலையத்திலிருந்து கன்னியாகுமரி- ஹவுரா செல்லும் வண்டியில் ஏறி மேல்மருவத்துர் ரயில்வே நிலையம் வந்தவுடன் ரயில் என்ஜினுக்கு அருகிலுள்ள பார்சல் பெட்டியில் ஏறி அதிலிருந்து 1 ஏலக்காய் மூட்டையை கீழே தள்ளி, அதனுடன் சேர்ந்து மேலும் சில மூட்டைகள் கீழே விழுந்தன என்று கூறினார்.

மேலும் இவை வண்டி மேல்மருவத்துரிலிருந்து கிளம்பியவுடன் மேற்படி அந்த மூட்டைகளை கீழே தள்ளினேன என்றும், வண்டி மதுராந்தகம் ரயில் நிலையம் அருகே

வந்தபோது தான் கீழே இறங்கியதாகவும், பிறகு, சிறிது நேரம் கழித்து மேற்படி மூட்டைகள் விழுந்த இடத்தை பார்க்கலாம் என்று சென்றபோது அங்கு யாரோ சிலர் வருவது பார்த்து தான் அங்கிருந்து சென்று விட்டேன் என்றும், பிறகு எனது சொந்த ஊரான பண்ருட்டிக்கு சென்று விட்டேன் என்றும், 28.08.2014 ஆம் தேதி 23.30 மணிக்கு செங்கல்பட்டு ரயில் நிலைய நடைமேடை 6-ல் வந்த வண்டி எண் 16859 சென்னை எக்மோர் - மங்களூர் வண்டியில் என்ஜினின் பக்கத்திலுள்ள பார்சல் பெட்டியில் தொங்கிக் கொண்டிருந்த சீல் கார்டை தான் பார்த்தபோது அங்கு பணியிலிருந்த போலீஸ் அதிகாரி தன்னை சந்தேகத்தின் பேரில் விசாரித்தார் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 29.08.2014 ஆம் தேதி மேல்மருவத்தூர் மற்றும் மதுராந்தககத்துக்கு இடையே ரயில்வே கிலோ மீட்டர் எண் 94/15 – 92/15 அதற்கிடையில் மூட்டைகள் இருந்த இடத்தை அவர் அடையாளம் காண்பிக்க, சாட்சிகள் கணேசன் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் நான் பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி **எதிரியின் ஒப்புதல் வாக்குமூலமானது அ.த.சா.ஆ. 14 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி **பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 15 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.